நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 324 /2025**

**P.W. 2 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மதனசேகர் |
| தந்தை / கணவர் பெயர் | : | பெர்னாட்ஷா |
| கிராமம் | : | பி.என்.பட்டி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 2** |
| வயது | : | 49 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், நவம்பர் மாதம், 04–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.47AM.

1. நான் தற்போது கொங்கணாபுரம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 12.11.2021ம் தேதி சுமார் 8.30 மணி அளவில் மேட்டூர் காவல் நிலையத்தில் பணிபுரிந்தபோது காவல் உதவி ஆய்வாளர் ஏகாம்பரம் அவரின் உத்தரவின்பேரில் மேட்டூர் எம்ஜிஆர் பாலம் அருகில் வாகன தணிக்கை செய்தபோது இரண்டு இருசக்கர வாகனத்தில் இரண்டு நபர்கள் நின்று

கொண்டிருந்தார்கள்.

2. அப்பொழுது ஒரு டெம்போவேன் வந்து நின்றது. அதில் இருந்து ஒருவர் உடனே மூட்டைகளை இறக்கி வையுங்கள் என்று சொன்னார். அதன்பேரில் அவர் இறக்கி கொண்டிருக்கும்போது காவல் உதவி ஆய்வாளர் சந்தேகத்தின்பேரில் அந்த வண்டியை நிறுத்த சொன்னார். நானும், முதல் நிலை காவலர் 2154 உமாசெல்வம் இருவரும் வண்டியை நிறுத்தி தணிக்கை செய்தபோது அந்த மூட்டையில் இருந்தது அரசால் தடை செய்யப்பட்ட ஹான்ஸ் மற்றும் குட்கா புகையிலை பொருட்கள் இருந்தது.
3. உடனே அவர்களை நிலையம் கொண்டு வந்து காவல் உதவி ஆய்வாளர் உத்தரவின் பேரில் அவருக்கு உதவியாக மேற்கண்ட இரண்டு நபர்களையும் கைது செய்து நிலைய பாராவசம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் விசாரணை செய்தபோது அதில் ஒருவர் பெயர் சிவக்குமார் என்றும் மற்றொருவர் ராஜேஸ்கண்ணா என்றும், தெரிய வந்தது. பின்பு காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் அவர்களை கைது செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. காவல் உதவி ஆய்வாளர்இந்த வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் ஏகாம்பரம் என்னை விசாரணை செய்தார். அவரை தவிர வேறு யாரும் என்னை விசாரணை செய்யவில்லை. சம்பவ இடத்திற்கு சென்ற நாங்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக அவரவர் இருசக்கர வாகனத்தில் சென்றோம். சம்பவ இடத்திற்கு வாகன தணிக்கைக்காக சென்றிருந்தோம் என்றால் சரிதான். அனைவரும் சீருடையில் தான் வந்தோம்.
2. சம்பவ இடத்திலிருந்து எதிரிகளை கூட்டிக்கொண்டு நேராக காவல் நிலையம் தான் சென்றோம் வேறு எங்கும் செல்லவில்லை. சம்பவ இடத்துக்கு அருகில் நிறைய கடைகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு சாலை நிருபுறமும் பேருந்து நிறுத்தம் உள்ளது என்றாலும் இரு புறமும் பேருந்தில் பயணம் செய்பவர்கள் இருந்திருப்பார்கள் என்றாலும் சரிதான். அந்த இடம் நான்கு ரோடுகள் சந்திக்கும் பகுதி என்பதால் அந்த இடத்தில் வேகத்தடையும் வேகத்தடுப்புகளும் இருக்கிறது என்றால் சரிதான்.
3. அந்த இடத்தில் ஒரு வாகனம் அந்த இடத்தை கடந்து செல்ல வேண்டுமென்றால்

மெதுவாக தான் செல்ல இயலும் என்றால் சரிதான். நான் சொன்ன நான்கு சக்கர வாகனத்தை யாரும் துரத்தி பிடிக்க முயற்சி செய்யவில்லை. அந்த வாகனம் குறிப்பாக எந்த பகுதியை நோக்கி சென்றது என்று எனக்கு ஞாபகம் இல்லை. அந்த வாகனம் தெர்மல் பகுதியிலிருந்து வந்தது. குறிப்பிட்டு எத்தனை மூட்டைகள் என்று என்னால் சரியாக சொல்ல முடியாது. சம்பவ இடத்திற்கு காலை எட்டு முப்பது மணிக்கு வந்தோம் அதன் பிறகு எட்டு 45 மணிக்கு எதிரிகளை அழைத்துக் கொண்டு காவல் நிலையம் சென்று விட்டோம்.

4. ஆவணங்களை காவல் நிலையம் சென்ற பிறகு உதவி ஆய்வாளர் ஏகாம்பரம் தான் தயார் செய்தார். காவல் நிலையத்தில் வைத்து தான் தயார் செய்தார். வழக்கமாக இந்த வழக்கின் முதல் எதிரி சிவக்குமார் என்பவர்தான் எங்கள் காவல் நிலையத்தில் கைது செய்யப்படும் எதிரிகளை சிறைக்கு அழைத்துச் செல்லும் பணிக்காக வாகனத்தை வாடகைக்காக ஓட்டுவார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.
5. சம்பவ இடத்தில் வைத்து எதிரியை நான் பார்க்கும்போது அவர் யார் என்று எனக்கு தெரியாது. மூட்டைகளை கைப்பற்றிய போது அக்கம்பக்கத்து கடைக்காரர்கள் யாரையும் நாங்கள் விசாரணை செய்யவில்லை. மேற்படி சம்பவ இடமான நான்கு முனை சந்திப்பில் காவல்துறை சார்பாக வைக்கப்பட்டுள்ள சிசிடிவி கேமரா உள்ளது என்றால் சரிதான்.
6. கேமரா பதிவுகளை உதவி ஆய்வாளர் பார்த்து அந்த வாகனத்தை கண்டறிய முயற்சி செய்து கொண்டிருந்தார் அதன் பின்பு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. எதிரிகள் இருவரும் உறவினர்களா என்று எனக்கு தெரியாது. முதலாவது எதிரிகளை சிறைக்கு அழைத்துச் சென்ற வகையில் வாடகை பாக்கி கேட்டு பிரச்சினை செய்ததால் அவர் மீது நடக்காத ஒரு சம்பவத்தை கூறி பொய் வழக்கு பதிவு செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
7. ஏதோ ஒரு வாகனத்தில் பொருட்களை கைப்பற்றி விட்டு அந்த வாகனத்தை அனுப்பி விட்டு எதிரிகள் தான் அந்த பொருட்களை கொண்டு சென்றதாக கைப்பற்றி எதிரிகள் மீது பொய் வழக்கு பதிவு செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.13PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா. கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**